# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029159

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி  PS: காவல்நிலையம்: V&AC  Year: ஆண்டு: 2018  FIR No.: மு.த.அ. எண்: 3/AC/18  Date: நாள்: 08.05.2018

2. (i) Act சட்டம்: u/s 7 of PC Act 1988  Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  17.04.18/11.00 hrs  Date to : நாள் வரை 19.04.18/10.30 hrs

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 07.05.18/11.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  Time : நேரம் 07.05.18/12.15 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம் 07.05.18/12.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  கணினி அச்சுப் பிரதி

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  சமூகநலத்துறை அலுவலக பாதுகாப்பு அலுவலர் அறை, சுமார் 1 கி.மீ. வடக்கு

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கிருஷ்ணகிரி.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  கலைலட்சுமி  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்  தமிழ்செல்வன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  23 yrs  (d) Nationality : நாட்டினம்  இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்  கூலி  (g) Address : முகவரி  தேவீரஹள்ளி கிராமம், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. கவிதா, பாதுகாப்பு அலுவலர், சமூகநலத்துறை அலுவலகம், கிருஷ்ணகிரி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கு. தனலட்சுமி

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.05.2016/2000hrs.

Name: பெயர் S. முருகன்.........
Rank: நிலை சிறப்பு உதவி ஆய்வாளர் No. எண் ....

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/AC/2018 சட்டப்பிரிவு 7 of PC Act 1988 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

07.05.2018ம் தேதி காலை சுமார் 12.15 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் தேவீரஹள்ளியை சேர்ந்த தமிழ்செல்வன் என்பவரின் மனைவி திருமதி தனலட்சுமி என்பவர் தனது அம்மா மாரி என்பவருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி அச்சுப்பிரதி மூலப்புகாரின் விவரம்: அனுப்புநர், தனலட்சுமி, க/பெ தமிழ்செல்வன், தேவீரஹள்ளி கிராமம், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கிருஷ்ணகிரி. நான் தேவீரஹள்ளியில் என் அப்பா அம்மாவுடன் குடியிருக்கிறேன். எங்க ஊரை சேர்ந்த ராமசந்திரன் மகன் தமிழ்செல்வனை காதலித்து, அதனால் தகராறு ஏற்பட்டு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் 26.06.2016-ல் தேவீரஹள்ளி மாரியம்மன் கோயிலில் எனக்கும் தமிழ்செல்வனுக்கும் திருமணம் நடைபெற்றது. அதன் பின்னர் நாங்கள் என்னுடைய கணவர் வீட்டில் குடியிருந்தோம். பின்னர் 08.12.2016ம் தேதியன்று என்னுடைய கணவரின் பெரியப்பா மகன் சபரிமலைக்கு மாலை போட்டுள்ளதாகவும், அதனால் நான் வீட்டில் இருந்தால் நன்றாக இருக்காது என்று சொல்லி என்னுடைய கணவர் என்னை என்னுடைய அம்மாவீட்டில் சென்று இருக்குமாறு சொன்னார். நானும் என்னுடைய அம்மாவீட்டிற்கு போய் இருந்தேன். அதன் பின்னர் என்னுடைய கணவரும் அவருடைய குடும்பத்தாரும் வெளியூருக்கு போனவர்கள் எங்கள் ஊருக்கே வரவில்லை. பின்னர், ஒருநாள் நான் பேருஹள்ளிக்கு சென்று அங்கு அவருடைய பாட்டி வீட்டில் இருந்த என்னுடைய கணவரைப்பார்த்து கேட்டபோது, அவர் எந்த பதிலும் சொல்லாமல் என்னை என்னுடைய அம்மா வீட்டுக்கே போய் இருக்குமாறு சொல்லி அனுப்பிவிட்டார். என் கணவரும் அவருடைய குடும்பத்தாரும் எங்களது ஊருக்கு வருவதை தொடர்ந்து தவிர்த்துவந்ததால், என்னை என் கணவருடன் சேர்த்து வைக்குமாறு கேட்டு 06.3.2018ம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள சமூக நலத்துறை அலுவலகத்திலிருந்த

பாதுகாப்பு அலுவலர் திருமதி கவிதா அவர்களிடம் மனு கொடுத்தேன். அவர் என்னை மறுநாள் காலை வருமாறு சொன்னார். நான் மீண்டும் மறுநாள் காலை சுமார் 11.00 மணிக்கு பாதுகாப்பு அலுவலர் திருமதி.கவிதா அவர்களை கிருஷ்ணகிரியிலுள்ள அவருடைய அலுவலகத்தில் சந்தித்தபோது, எங்களுடைய இரு குடும்பத்தாருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் தகவல் தெரிவிக்கும்போது வந்து பார்க்குமாறு சொன்னார். பிறகு, எனக்கு கிடைத்த தகவலின் பேரில் 17.04.2018ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நானும் என்னுடைய பெரியம்மா மகன் அண்ணாமலையும் பாதுகாப்பு அலுவலர் திருமதி கவிதா அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்திந்தோம். அப்போது அவர் ரூபாய் 5,000/- தனக்கு கொடுத்தால்தான் என்னுடைய புகாரின் மீதான அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியும் என்று சொன்னார். அவ்வளவு பணம் ரெடிபண்ண முடியாது என சொல்லிவிட்டு வந்துவிட்டோம். பின்னர் மீண்டும் 19.04.2018ம் தேதி கிருஷ்ணகிரி வந்து, திருமதி.கவிதா அவர்களை காலை சுமார் 10.30 மணிக்கு அவருடைய அலுவலகத்தில் அவரை சந்தித்து என்னுடைய மனுமீதான நடவடிக்கை பற்றி கேட்டேன். அப்போது அவர் ரூபாய் 5,000/- கொடுத்தால் மட்டுமே அறிக்கையை நீதிமன்றத்துக்கு அனுப்பமுடியும் என்று சொல்லிவிட்டார். நான் திரும்ப வந்துவிட்டேன். மீண்டும் இன்று 07.05.2018ம் தேதி தேதி காலை நானும் என் அம்மா மாரியும் கிருஷ்ணகிரி வந்து, காலை சுமார் 11.00 மணிக்கு திருமதி.கவிதா அவர்களை அவருடைய அலுவலகத்திற்கு சென்று சந்தித்து, அவரிடம் என்னுடைய மனுமீதான நடவடிக்கை பற்றி கேட்டோம். அப்போது அவர் ஏற்கனவே கேட்ட பணம் ரூபாய் 5,000/- கொண்டுவந்தாயா என்று கேட்டார். அதற்கு நாங்கள் அவ்வளவு பணம் ரெடிபண்ணமுடியவில்லை அதில் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டோம். அதற்கு திருமதி.கவிதா அவர்கள் ரூபாய் 5,000/-ல் ரூபாய் 1000/- குறைத்துக்கொண்டு ரூபாய் 4,000/-த்துடன் எப்போது வருகிறாயோ அப்போதுதான் என்னுடைய மனு மீதான அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்புவேன் என்று முடிவாக சொல்லிவிட்டார். அவருக்கு ரூபாய் 4,000/- லஞ்சமாக கொடுத்து என்னுடைய வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxxxx (தனலட்சுமி) 07.05.2018.

ஐயா, மேற்படி எழுத்துமூலமான புகாரை 07.05.2018-ம் தேதி மதியம் 12.15 மணிக்கு பெற்று முதற்கட்ட விசாரணை கோரி சென்னை ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு FAX மூலம் அனுப்பினேன். Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 07/05/2018. ஐயா, 07.05.2018ம் தேதி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக 07.05.2018ம் தேதியிட்ட நமூனா எண் P.E.130/2018/SW//KG-ன் படி 07.05.2018ம் தேதி 16.00 மணிக்கு முதற்கட்ட விசாரணை பதிவுசெய்யப்பட்டது. Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 07/05/2018. முதற்கட்ட விசாரணையில், கிருஷ்ணகிரி சமூக நலத்துறை அலுவலகத்தில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர் திருமதி.கவிதா, புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்டு வாங்க வேண்டும் என்ற குற்ற நோக்குடன் அவருடைய மனுமீதான விசாரணை அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்ப ரூ.5,000/-ம் லஞ்சமாக கேட்டதாகவும், பின்னர், புகார்தாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் மேற்படி தொகையில் ரூபாய் 1,000/- குறைத்துக்கொண்டு ரூபாய் 4,000/- லஞ்சமாக கேட்டதாகவும் தெரியவருகிறது. எனவே கிருஷ்ணகிரி சமூகநலத்துறை அலுவலகத்தில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர் திருமதி.கவிதா மீது குற்றவழக்கு தொடர போதுமான முகாந்திரம் இருப்பதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததால், அவர்மீது கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/AC/2018 u/s 7 of Prevention of Corruption Act, 1988-படி 08.05.2018-ம் தேதி மாலை 18.00 மணிக்கு முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். Sd/-xxxxxxxxx (S.முருகன்) Inspr., V& AC, Kgi, 08/05/2018. முதல் தகவலறிக்கையின் அசலையும், புகாரையும் கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

08/05/18
Inspr.
V&AC, Kgi